2002 ஏப்ரல் 5]

என்று சொல்லியிருக்கிறார்கள்; அப்படிப்பட்ட அந்தத் திட்டத்திலே இப்படி பூக்கள் விளைகின்ற பகுதியிலே செண்ட் தொழிற்சாலை தொடங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கூறியதுபோல, புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு அறிவித்திருக்கிற தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஒன்றியத்திலும், ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒவ்வொரு வட்டத்திலும் கிடைக்கின்ற மூலப்பொருளை ஆதாரமாகக் கொண்டு அங்கே ஒவ்வொரு தொழிற்சாலை அமைக்க இருக்கிறார்கள் என்பதை மிகவும் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 108, திரு. மா. இராஜசேகர், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்.

108—

கூட்டுறவு நூற்பாலை

***7079—திரு. மா. இராஜசேகர்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராஜபாளையத்தில் கூட்டுறவு நூற்பாலை அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். இராஜபாளையத்தில் கூட்டுறவு நூற்பாலை அமைக்க சாத்தியக்கூறு இல்லை.

திரு. மா. இராஜசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்"

என்ற திருவள்ளுவரின் குறளுக்கு இலக்கணமாகவும், "ஒரு தாய் வயிறு தாங்காது என்ற காரணத்தினால் பல தாயின் வயிற்றில் பிறந்தோம்"

என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் சொல்லுக்கேற்ப, ஒரு கோடி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களுக்கும், உலகமெங்கும் வாழும் தமிழ்ப் பெருமக்களுக்கும் தாயாக விளங்கி, கடந்த ஐந்தாண்டு காலம் முன்னாள் முதல்வர் கொடுத்து வந்த மலைபோன்ற எதிர்ப்புகளைத் தகர்த்தெறிந்து, மலைகளில் உயர்ந்த மலையாம் இமயமலையைப்போல் உயர்ந்து நின்று, மூன்றாவது முறையாக தமிழக முதல்வராகப் பொறுப்பேற்று இருக்கும், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள்; — நெருப்பாற்றையும் நீர்வீழ்ச்சியாக்குகின்ற ஆற்றல், அனலையும் தென்றல் ஆக்கும் சக்தி, சதிகளை முறியடிக்கும் வியூகம், சூழ்ச்சிகளை வீழ்த்திடும் மதி நுட்பம், தடைகளை உடைத்தெறியும் வீரம், துரோகத்தை வீழ்த்தும் விவேகம், இவையனைத்தும் ஒருங்கே அமையப் பெற்ற மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், சாதாரண எளியோனான என்னை இந்த மன்றத்தின் உறுப்பினராக்கி அழகு பார்க்கும் எங்கள் தாய், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கு நெஞ்சம் நிறைந்த நன்றியைப் பணிந்து சமர்ப்பித்து, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் வேண்டுகோளை ஏற்று, இரட்டை இலைச் சின்னத்தில் வாக்களித்து, இந்த அவைக்கு என்னை அனுப்பி வைத்த இராஜபாளையம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இராஜசேகர், பேசுகிற வாய்ப்பு கிடைக்கும்போது சொல்லுங்கள். இப்போது கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. மா. இராஜசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கோவைக்கு அடுத்து எனது இராஜபாளையம் தொகுதியில்தான் சிறிய பெரிய நூற்பாலைகள் ஏராளமாக இயங்கி வருகின்றன. நெசவாளர்கள் அதிகமாக வசித்து வருகிறார்கள். பலதரப்பட்ட மக்களும் நூற்பாலைகளுக்குத்தான் வேலைக்குச் செல்கிறார்கள். இவர்கள் தனியார் நூற்பாலைகளில் பணிபுரியும்போது பல பிரச்சினைகள் வருகின்றன. ஆகவே, இவர்களின் நலன் கருதி அரசு கூட்டுறவு நூற்பாலை அமைக்க முன்வருமா என்பதனைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு நூற்பாலைகள், பஞ்சு விலை, பஞ்சு தட்டுப்பாடு,

2002 ஏப்ரல் 5]

தொழிலாளர் பிரச்சினை, நிதி நெருக்கடி உள்ளிட்ட பல பிரச்சினைகள் காரணமாக ஏற்கெனவே நட்டத்தில் இயங்கிக் கொண்டிருப்பதாலும், மேலும் ஸ்ரீவில்லிப்புத்தூர் எட்டையபுரத்தில் நூற்பாலைகள் இயங்குவதாலும், இராஜபாளையத்தில் புதிய கூட்டுறவு நூற்பாலை தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லையென்பதை இந்த அவைக்குத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 109, திரு. ப. அரசன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

109—

சுற்றுலா நகரம்

***5947—திரு. ப. அரசன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோயில் நகரை சுற்றுலா நகரமாக அறிவிக்கும் கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோயில் நகரை சுற்றுலா நகரமாக அறிவிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ப. அரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கின்ற சிற்பக் கலைகளிலேயே மிக அற்புதமான சிற்பக் கலை உள்ள கோயில் ஆவுடையார்கோயில் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கோரிக்கையை மறுபரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. மில்லர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் எந்த ஒரு இடத்தையும், சுற்றுலாத் துறை கொள்கையளவில் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. சுற்றுலாத் தலமானது, தன்னகத்தே கொண்டுள்ள சிறப்புத் தன்மை, வரலாற்றுச் சான்றுகள், வளங்கள் மற்றும் மக்களின் வருகை, இவற்றைக் கொண்டு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS